# திருவாசகத்தில் அறிவியல் சிந்தனைகள்

**முனைவர் கா. சந்தானலெட்சுமி**
**இணைப்பேராசிரியர் மற்றும் தமிழ்த்துறைத் தலைவர்**
**மன்னர் துரைசிங்கம் அரசு கலைக்கல்லூரி, சிவகங்கை**
**mail id:lakshmisanthana617@gmail.com**

**37**

**ஆய்வுச்சுருக்கம்**

'திருவாசகத்திற்கு உருகார் ஒரு வாசகத்திற்கும் உருகார்' என்ற வாக்கிற்கு ஏற்ப அருள்நெறிப் பனுவலாக மாணிக்கவாசகரின் திருவாசகம் அமைகிறது. இறைவனே குருவாக வந்து ஞான மார்க்கத்தில் மாணிக்கவாசகரை ஆட்கொண்டார். இறைவன் கைபட எழுதிய நூலாக திருவாசகம் அமைகிறது. அனைத்து துறைசார் அறிவுப்பெட்டகமாகத் திருவாசகம் திகழ்கிறது. எண்ணிலடங்கா அறிவியல் கருத்துக்களை ஆன்மீகத்தோடு தரும் அற்புதப் படைப்பாகத் திருவாசகம் திகழ்கிறது. கணிதவியல், இயற்கை அறிவியல், விண்ணியல், மண்ணியல் போன்றவை சார்ந்த கருத்துக்கள் பக்திவெளிப்பாட்டோடு பரவலாக வெளிப்படுத்தப்பட்டுள்ளன. பஞ்சபூதக் கோட்பாடுகள் அறிவியலுக்கும் ஆன்மீகத்திற்கும் பொருந்துமாறு பாடப்பட்டுள்ளது திருவாசகத்தின் அதிசயமே ஆகும். பிண்டம் தொட்டு அண்டம் வரையிலான கருத்துக்களை அணுஅணுவாக மாணிக்கவாசகர் திருவாசகத்தில் பதிவு செய்துள்ளதை விளக்கமுறை ஆய்வு மற்றும் ஒப்பீட்டு ஆய்வு அணுகுமுறையில் இவ்வாய்வு தெளிவுபடுத்துகிறது.

**கருச்சொற்கள்**

அண்டம், உருண்டை, பிண்டம், பருப்பொருள், துன்இருள், நுண்ணறிவு, பேரொளி, தசம், கண்டம்,குருமணி, பெருந்துறை, திருவாதவூரர்,வல்வினை, தாவர சங்கமம்

**முன்னுரை**

'திருவாசகத்திற்கு உருகார் ஒரு வாசகத்திற்கும் உருகார்' என்ற ஆன்றோர் வாக்கிற்கு ஏற்ப பன்முக கருத்துப் பனுவலாக திருவாசகம் அமைகிறது. பக்தி இலக்கியமாக இருப்பினும் அறிவியல் சிந்தனைகளை உடையதாகவும் திருவாசகம் திகழ்கிறது. இலக்கிய செழுமையும் இலக்கண கட்டமைப்பும் உடைய திருவாசகத்தில் இடம்பெறும் அறிவியல் சிந்தனைகள் விளக்கமுறை ஆய்வு மற்றும் ஒப்பீட்டு ஆய்வு அணுகுமுறையில் ஆராயப்படவுள்ளன.

**திருவாசகத்தின் தனிச்சிறப்புக்கள்**

பக்தி இலக்கியங்களை மிகுதியாக கொண்டதால்தான் 'தெய்வத்தமிழ்' என்று தமிழ்மொழி அழைக்கப்படுகிறது. 'மாணிக்கவாசகப்பெருமான் அருளிச் செய்த திருவாசகம் பெரிதும் தலைசிறந்த ஒரு தெய்வீகப் புனித நூலாகத் திகழ்கிறது.'[1] அதனால்தான் கோயில்களில் 'திருவாசக முற்றோதல்' நிகழ்வு நடைபெறுகிறது. மாணிக்கவாசகர் அருளிச்செய்த திருவாசகத்தை திருவாசகத்தேன் என்றும் கூறுவர். தேன் உணவு, தேன் மருந்து, திருவாசகம் பயிலுதல், ஓதுதல் மருத்துவம் போன்றதாகும்.'[2] ஆன்மிகம் அறிவியல் ஆவதை 'மருத்துவம்' என்ற சொல்லாட்சியே நன்கு உணர்த்தும். 'பசிப்பிணி மருத்துவர்' என உணவு தந்து பசிபோக்குபவரை புறநானூறு உணர்த்துகிறது. இலக்கியம் மனித இனத்திற்குரிய மருத்துவம் ஆவதை தமிழ் இலக்கியம் வாயிலாக அறிய முடியும்.

'வான்கலந்த மாணிக்கவாசக! நின் வாசகத்தை

நான்கலந்து பாடுங்கால், நற்கருப்பஞ்சற்றினிலே
தேன்கலந்து, பால்கலந்து, செழுங்கனித் தீஞ்சுவை கலந்து, என்
ஊன்கலந்து, உயிர்கலந்து, உவட்டாமல் இனிப்பதுவே'(திருவருட்பா 5-12)

என்று வள்ளலார் உருகியுள்ளார். ஜி.யு போப்பும் திருவாசகத்தினால் 'தன்னை தமிழ் மாணவன்' என்று அடையாளப்படுத்தக் கூறியுள்ளார். இறைவன் அடி எடுத்து தந்த பாடலாக பெரிய புராணம் உள்ளது. இறைவன் பாடிய பாடலாக 'கொங்குதேர் வாழ்க்கை' என்ற குறுந்தொகை பாடல் உள்ளது. இறைவன் எழுதிய உரையாக 'இறையனார் களவியல்' உரை அமைகிறது. இறைவன் தன் கைப்பட எழுதிய பாடலாக திருவாசகம் அமைகிறது. 'திருவாதவூரர் சொல்லச் சொல்ல அழகிய சிற்றம்பல உடையனார் எழுதியது' என எழுதப்பட்ட திருவாசக ஓலைச் சுவடிகள் இன்றும் புதுச்சேரியில் உள்ள அம்பலத்தாரும் சுவாமிகள் மடத்தில் பாதுகாக்கப்படுகிறது. 658 பாடல்களைக் கொண்ட திருவாசகத்தின் முதல் பாடலாக சிவபுராணம் அமைகிறது.

இந்த உலகமானது நிலம், நீர், காற்று, நெருப்பு, வளி என்ற ஐந்தாலாகியது. அறிவியல் முறை குறிப்பாக இயற்கையின் பஞ்ச பூதங்களின் நிகழ்வுகளை ஆராயப் பயன்படுத்தப்பட்டது.'[3] அறிவியல் கோட்பாடாக பஞ்சபூத கோட்பாடு அமைகின்ற நிலையில் தமிழின் இலக்கிய இலக்கணங்களில் அக்கோட்பாடு வெகு இயல்பாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

பஞ்ச பூதங்களின் உருவாக்கமாகவே மனித உயிரும் உடம்பும் அமைகிறது. சிவனாரும் பஞ்சவர்ணேஷ்வராக திருச்சி உறையூரில் காட்சியளிக்கிறார். சிவனின் பஞ்ச பூத தலங்களாக ஐந்து இடங்கள் அறியப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| நிலம் | - | திருவாலங்காடு |
| நீர் | - | திருவானைக்கா |
| வாயு | - | திருகாளஹஸ்தி |
| நெருப்பு | - | திருஅண்ணாமலை |
| வளி | - | சிதம்பரம் |

'நிறங்களே ஐந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த' (சிவபுராணம் 49) என்ற சிவபுராண வரி பஞ்ச பூதங்களின் ஐந்து நிறங்களில் இறைவன் நிறமாகக் கொண்டதை காட்டுகிறது. அதனால்தான் 'நமச்சிவாய' என்ற ஐந்தெழுத்து மந்திரம் குறியீடாக்கப்பட்டுள்ளது எனலாம்.

பஞ்சபூதக் கருத்தினை மாணிக்கவாசகரின் போற்றித் திருஅகவலிலும் காண முடிகிறது.

வானகத்து அமரர் தாயே போற்றி
பாரிடை ஐந்தாய் பரந்தாய் போற்றி
நீரிடை நான்காய் நிகழ்ந்தாய் போற்றி
வளியிடை இரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி
வெளியிடை ஒன்றாய் விளைந்தாய் போற்றி (போற்றித் திருஅகவல் 136-141)

என்ற எண்ணிக்கை வரிசை கணக்கு எண்களின் இறங்கு வரிசையைக் (Decending Order)

காட்டுவதாக உள்ளது.

நிலம் நீர் காற்று வாயு வெளி என பஞ்சபூதங்களில் ஐந்தாக உள்ளன.
நன்னீர் கடினநீர் மழைநீர் கடல்நீர் என நீர் நான்காகும்.
முப்புரம் எரித்த தீ - என தீ மூன்றாகும்.
நல்லகாற்று ($H_2O$) தீயகாற்று ($CO_2$) – என காற்று இரண்டாகும்.
ஆகாயம் அனைத்தையும் உள்ளடக்கி வெளி ஒன்றாகும்.

என்ற பஞ்சபூத வகைப்பாடுகள்; அமைச்சராகவும் சைவ அடியவராகவும் விளங்கிய மாணிக்கவாசகரின் அறிவுநுட்பத்தை காட்டுகின்றன. புலவர்கள் பாட்டறிவு மட்டுமன்றி பலதுறை அறிவினையும் பெற்றவர்களாக இருந்துள்ளதையே தமிழ் இலக்கியங்கள் காட்டுகின்றன. கணியன், அறிவன், மருத்துவன் போன்ற புலவரின் அடைப்பெயர்கள் இதனை தெளிவாக்கும். விண்வெளி அறிவியலோடு விமலா, நிமலா என சிவனாரை போற்றும் விதம் சிலிர்க்க வைக்கிறது.

**திருவாசகத்தில் அண்டக்கோட்பாடுகள்**

திருஅண்டப்பகுதி என்ற திருவாசகப் பாடப்பகுதியில் விண்ணியல் சார்ந்த அறிவியல் கருத்துக்கள் இடம் பெறுகின்றன. 'திருஅண்டப்பகுதியில் மாபெரும் கல்வியாளர்கள் 20ஆம் நூற்றாண்டில் கண்ட விஞ்ஞான புதுமைகளைப் போகிற போக்கில் சொல்லிச் செல்கிறார். இதைவிடச் சிறப்பு என்னவென்றால் இவ்விஞ்ஞான புதுமைகளை இறைவன் திருவருளோடு சேர்த்துக் கூறியதாகும்'[4]

அண்டப்பகுதியின் உண்டைப் பிறக்கம்
அளப்பருந் தன்மை வளப் பெருங்காட்சி
ஒன்றனுக்கு ஒன்று நின்றெழிர் பகரின்
நூற்று ஒரு கோடியின் மேற்பட விர்ந்தன
இல்நுழை கதிரின் துன்அணுப் புரையச்
சிறிய ஆகப் பெரியோன் தெரியின் (திருவாசகம் 1 - 6)

என்ற திருவாசக வரிகளில் அண்டம், உருண்டை பேரண்டம் நுண்துகள் அண்டங்களின் எண்ணிக்கை ஆகியன பற்றிய கருத்துக்கள் இடம் பெறுதைக் காண முடிகிறது. உலகம் உருண்டையானது கோள்கள் உருண்டையானவை என்பதையே 'உண்டைப் பிறக்கம்' என்ற சொல்லாட்சி உணர்த்துகிறது.

'ஸ்டீபன்ஹாக்கிங் ஒரு ஆங்கிலேய அண்டவியல் நிபுணர். கருந்துளைகள் மற்றும் பெருவெடிப்புக் கோட்பாட்டை விளக்கிய நவீன கால விஞ்ஞானிகளில் ஒருவராகக் கருதப்படுகிறார். விண்வெளி ஆய்வுகளில் ஈடுபட்ட இந்த நட்சத்திர விஞ்ஞானி 1988ஆம் ஆண்டு தனது அறிவியல் கோட்பாடுகளை விளக்கிக்கூறும் வகையில் 'காலத்தின் சுருக்கமான வரலாறு' என்ற புத்தகத்தை வெளியிட்டார்.'[5] இவரின் கருத்துக்களின் முன்வரைவுத்தன்மையை திருவாசகத்தின் திரு அண்டப்பகுதியில் காண முடிகிறது எனலாம்.

பால்வெளி அண்டங்களோடு கருந்துளை முக்கியமான பேசுபொருளாகும். கருந்துளை பற்றிய கோட்பாட்டை குறிப்பிடுவதாக,

சோதியனே துன் இருளே தோன்றல் பெருமையனே (சிவபுராணம் - 72)

என்ற திருவாசகவரி அமைகிறது எனலாம். சோதி, இருள் என்ற சொற்கள் முரண் நயத்தோடு அமைந்து கவிச்சுவை படைக்கிறது. இதில் நுட்பமான அறிவியல் கருத்தினை மாணிக்கவாசகர் அமைத்துள்ளார். சோதி என்பதனை ஒளி வடிவான இறைவன் என்பதிலிருந்து ஒளி வழிபாடு பண்டைத்தமிழருடையது என்பதால்தான் சூரிய வழிபாடு, ஆவணி ஞாயிறு வழிபாடாக இன்றளவும் தொடர்கிறது.

'துன் இருள்' என்று குறிப்பிடுவது கருந்துளையை எனலாம். சந்திரன், சூரியன் ஆகியவற்றில் கதிர் நுழைந்து செல்லமுடியாத இடத்து இருளை விலக்க அக்கினி – விளக்கும் பயன்படுகிறது. இவற்றினிடத்தும் இருட்பகுதி உண்டு சந்திரன் சூரியன் ஆகியவற்றின் உள்ளே இருண்ட பகுதி இருப்பதை விஞ்ஞானம் காட்டிச் செல்கிறது.'[6]

விடை தெரியாத பிரபஞ்ச வெளிப்பாடுகள் விண்வெளி ஆய்வின் தேடல்களாக இன்று வரை தொடர்கின்றன. மாணிக்கவாசகர் இத்தேடலை இறையின் வெளிப்பாடாக சிவபுராணத்தில் சொல்கிறார். இங்கு அறிவியலே ஆன்மீகமாவதைக் காண முடிகிறது.

'மனித சமுதாயத்தின் முக்கியமான கருவி மொழி. அது நாள்தோறும் நவீனப்படுத்தப்பட வேண்டும். அது நவீனமாக வேண்டும்'[7] செவ்வியல் மொழியாக அறியப்படும் தமிழ்மொழி பக்தி இலக்கிய காலத்திலே இன்றைய நவீன அறிவியல் கருத்துக்களை ஆன்மிகத்தோடு இணைத்து திருவாசகத்தில் மாணிக்கவாசகர் வெளிப்படுத்தியுள்ளார்.

**காந்தவியல் கோட்பாடு**

'ஆல்பர்ட் அய்ன்சுட்மீன் -1915இல் பொதுச் சார்பியல் கோட்பாட்டை உருவாக்கினார்.அதில் ஈர்ப்பு ஒளியின் இயக்கத்தையும் கட்டுப்படுத்தும் எனக் கூறினார்.'[8] ஈர்ப்பு விசைதான் புவியீர்ப்பு விசையாகி பூமியின் சுழற்சிக்கு அடிப்படையாகிறது. நியூட்டனின் ஈhப்புவிதிக் கோட்பாட்டை,

ஈர்த்து என்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே (சிவபுராணம் 14)

என்ற திருவாசக வரிகள் வெளிப்படுத்துகின்றன. 'காந்தம் எந்தவிதப் புறச் செயலுமின்றி இரும்பை இழுக்கின்றது. அந்த இரும்புக்குத் தன்னைத் தடுத்து நிறுத்திக்கொள்ளும் ஆற்றல் இல்லை. காந்தத்தின் வலுவுக்கு ஏற்ப இரும்பு மிக விரைவாகச் சென்று காந்தத்துடன் ஒட்டிக் கொள்கிறது.'[9] இதனையே சைவ சித்தாந்தத்தில் பதி, பசு கோட்பாடாக விவரிக்கிறது. இறைவனோடு உயிர் சென்று அடைவதே வாழ்வியல் நோக்கமாகும். காந்தவியல் கோட்பாட்டில் காந்தமான இரும்பினை ஈர்ப்பது போல இறைவன் அடியவர்களை ஈர்ப்பதே சின்முத்திரையாகக் காட்டப்படுகிறது.

அண்டவெளியில் விண்ணாகி மண்ணாகி... என்ற சிவபுராண வரி விண்ணியல், மண்ணியல் அறிவியல் கோட்பாடுகளை செல்லா நின்ற தாவர சங்கமத்துள் என்ற சிவபுராண வரியில் பரிணாமக் கோட்பாடும் வெளிப்படுத்துகின்றன. திரு அண்;;டப்பகுதியில் பால்வெளி நுட்பங்களும் வானிலை அறிவியல் சிந்தனைகளும் உணர்த்தப்படுகின்றன.

தோற்றச் சுடரொளியாம் சொல்லாத நுன்னுயிர்வாய் என்ற வரியில் அண்டவெளியில் பருப்பொருள் கோட்பாட்டை உய்த்துரை முடிகிறது. 'தசமதில் தன்னில் தாயொடு பிழைத்தும்' என்ற போற்றிதிருஅகவல் வரி மனித உடற்கூறியல்,கருவியல் ஆகிய அறிவியல் கருத்துக்களை உள்ளடக்கியதாக உள்ளது. இத்தகைய பல்வேறு அறிவியல் ஆய்வுகளின் கருத்து வெளிப்பாடாக

ஆன்மிகத்தோடு இணைந்ததாக திருவாசகப்பகுதிகள் அமைவதை இந்த ஆய்வு உறுதி செய்கிறது. பல்வேறு அறிவியல் ஆய்வுக்கான தரவுகளைத் திருவாசகம் கொண்டுள்ளது.

**முடிவுரை**

மாணிக்கவாசகரின் திருவாசகத்தில் கணிதவியல் இயற்கை அறிவியல்(Natural Science) தாவரவியல், இயந்திரவியல், விண்ணியல் மண்ணியல் போன்ற அறிவியல் துறைசார் கருத்துக்கள் விரவியிருப்பதை இவ்வாய்வு சான்றுகள் வாயிலாக உறுதி செய்கிறது. அமைச்சராக இருப்பவர் பல்துறை சார்ந்தவராக இருக்க வேண்டும் என்ற கருத்தின்படி மாணிக்கவாசகரின் பல்நுட்ப அறிவு அவரின் திருவாசகத்தில் வெளிப்படுகிறது. ஞானமார்க்கத்தில் இறையோடு தொடர்புடைய மாணிக்கவாசகரின் திருவாசகமும் பல்வேறு அறிவியல் ஆய்வுகளுக்கான அடிப்படைத்தளமாக அமைந்துள்ளது. இலக்கியங்கள் கற்பனை உணர்ச்சிகளோடு கருத்துக்களின் ஆவணப்பெட்டகமாக இருப்பதை திருவாசகம் கொண்டு இவ்வாய்வு தெளிவுபடுத்துகிறது.

**குறிப்புகள்**

1. ந.ரா. முருகவேள் - திருவாசகம் ப.4
2. பொன்னம்பல அடிகளார் (ப.ஆ), குன்றக்குடி அடிகளார் நூல் வரிசை தொகுதி -3 ப.29
3. வ.செ குழந்தை சாமி, அறிவியல் தமிழ் ப.44
4. அ. ச ஞானசம்பந்தம், திருவாசக சிந்தனைகள் ப.9
5. மின்னம்பலம் https://minnambalam.com 15 Mar 2018
6. அ. ச ஞானசம்பந்தம் மேலது ப.105
7. வா. செ. குழந்தைசாமி மேலது ப.36
8. wikipediahttps://tamwikipedia.org>wiki
9. அ. ச ஞானசம்பந்தம் மேலது ப.109

**துணைநூற்பட்டியல்**


1. குழந்தைசாமி வா. செ — அறிவியல் தமிழ்
பாரதி பதிப்பகம்
ஆறாம் பதிப்பு 2001
சென்னை 17

2. பொன்னம்பல அடிகளார்(ப.ஆ) — குன்றக்குடி அடிகளார் நூல்வரிசை தொகுதி - 8 சமய இலக்கியம்
மாணிக்கவாசகர் பதிப்பகம்
சென்னை – 8
முதல் பதிப்பு 2001

3. ஞானசம்பந்தன் . அ. ச — திருவாசகம் சில சிந்தனைகள்
கங்கை புத்தக நிலையம்
சென்னை – 17
மூன்றாம் பதிப்பு 2002

4. முருகவேள் ந.ரா — திருவாசகம்
அண்ணாமலை பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்
சிதம்பரம்
முதல்பதிப்பு 1982




